வாகை பதிப்பகம்

International Research Journal of Tamil Literary Studies

# Rhetorical Connotations of The Pharse ‘Thinnai’

# ‘திணை’ என்னும் சொல்லாடல் உணர்த்தும் பொருண்மைகள்’

**வி. சிவகுமார்** [அ, *]

[அ] ***தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காரைக்கால், புதுச்சேரி, இந்தியா.***

**V. Sivakumar** [a, *]

[a] **Department of Tamil, Arnigar Anna Govt. Arts and Science College, Karaikal, Puducherry, India.**

[*] **Corresponding Author:** tctamilmadurai@gmail.com

**Received: 19-07-2021, Accepted: 07-04-2020**

DOI: https://doi.org/10.34256/vp2134

***Abstract:*** The ‘word’ means that everyone knows what it means. Time and space confirm that ‘word’ is the ‘meaning’ of the word. Tholkappiyar who says that everything is about meaning. The word '**Thinnai**' is given in many meanings in the Tamil language. Tholkappiyar refers to '**Thinnai**' by other names when thinking about language. He clarified the Tamil grammar by using different types of names when thinking about the meaning found in the literature. The pharse ‘'**Thinnai**'’ depending on the grammar and the literature it has been handled in a multiple of ways. In Tamil literature it is known for its dependence on land and its morality. The word ‘'**Thinnai**'’ is known in various context in Tamil Literature.

**Keywords:** *Rhetorical connotation, Time, Space, Thenai, Grammer and Literature context,*

***ஆய்வுச்சாரம்:*** *எல்லாம் சொல்லும் பொருள் குறித்தனவே என்னும் தொல்காப்பிய நூற்பாவினை அடியொற்றி ‘சொல்’ என்னும் ஒற்றை மொழி அது குறித்தப் பொருள் தருவது அனைவராலும் அறியக்கூடியது. இருப்பினும் ‘சொல்’ என்பதும் சொல்லுக்கானப் ‘பொருள்’ என்பதினையும் காலமும் களமும் உறுதிசெய்கிறது என்பதினை மையப்பொருளாகக் கொண்டு ‘திணை’ எனும் சொல் தமிழிலக்கியத்தைப் பொறுத்தவகையில் ஐவகை நில மக்களையும் அவர்களது ஒழுக்கங்களையும் மட்டுமே குறிப்பதாக அறியப்படுகிறது. இலக்கணங்களும் இலக்கியங்களும் அது சார்ந்திருக்கின்ற காலத்தின் அடிப்படையில் ‘திணை’ எனும் சொல்லுக்கு நிலத்தையம் ஒழுக்கத்தினையும் கடந்து பொருள் தருகிறது. மொழியியல் அறிஞர்கள். நிகண்டுகள். அகராதிகள். கலைக்களஞ்சியங்கள் என பல்வேறுவிதமான இலக்கியம் சார் சிந்தனைகள் ஒற்றைச் சொல்லுக்குள் அமையும் பொருளினை விளக்குகின்றன.*

## *முன்னுரை*

*எல்லாம் சொல்லும் பொருள் குறித்தனவே என்னும் தொல்காப்பிய நூற்பாவினை அடியொற்றி ‘சொல்’ என்னும் ஒற்றை மொழி அது குறித்தப் பொருள் தருவது அனைவராலும் அறியக்கூடியது. இருப்பினும்*

*‘சொல்’ என்பதும் சொல்லுக்கானப் ‘பொருள்’ என்பதினையும் காலமும் களமும் உறுதிசெய்கிறது என்பதினை மையப்பொருளாகக் கொண்டு இவ்வாய்வு ஆராயப்பட்டுள்ளது.*

*‘திணை’ என்ற சொல் தமிழ் மொழியில் பற்பல பொருண்மைகளில் வழங்கப்படுகிறது. தொல்காப்பியர் மொழியைப் பற்றி எண்ணும்போது திணைகளை வேறு பெயர்களால் குறிப்பிடுகிறார். இலக்கியங்களில் காணப்படும் பொருளைப்பற்றி எண்ணும்போது வேறு வகையான பெயர்களைக் கையாண்டு தமிழ் இலக்கண நெறியைத் தெளிவுபடுத்தியுள்ளார். ஆலங்குடி வங்கனார் என்னும் சங்ககாலப் புலவர் பாடிய குறுந்தொகையின் 45ஆம் பாடலில் பெண் ஒருத்தி தன்னைப் பெண்திணையில் பிறந்ததாகக் குறிப்பிடுவது 'திணை' என்னும் சொல் பிரிவு (ஆண்பிரிவு, பெண்பிரிவு) என்னும் பொருளைத் தருவதாக அமைந்துள்ளது. தொல்காப்பியர், சொல்லதிகாரத்தில் மக்களைக் குறிக்க உயர்திணை என்றும். உயிருள்ள மற்றும் உயிரற்றவைகளைக் குறிக்க அஃறிணை என்றும் குறிப்பிடுகின்றார்.*

*“உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே*

*அஃறிணை என்மனார் அவரல பிறவே*

*ஆயிரு திணையின் இசைக்குமென் சொல்லே”　　　(தொல்.சொல்.நூ.484)*

*என்பார். இங்கு திணை என்ற சொல் மக்களையும் பிற உலகத்துப் பொருள்களையும் குறிக்கும் சொல்லாக உள்ளது. உலகம் என்ற சொல்லிற்கு சமமாக கருதப்படும் சொல்லாகத் திணை என்ற சொல் உள்ளது. மேலும் ஆகுபெயராகவும் வேறுபொருள் குறித்த ஒரு சொல் கிளவியாகவும் திணை என்ற சொல் உள்ளது.*

## *ஆய்வு முன்னோடிகள்*

*திணை இலக்கியம் பற்றியும் திணைசார் மக்களின் வாழ்வியல் குறித்தும் தொடர்ச்சியாக ஆய்வுகள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இவ்வாய்வானது ‘திணை’ என்னும் சொல் குறித்த ஆய்வாக அமைகிறது. இருப்பினும் திணை இலக்கியம் பற்றியும் திணை வாழ்வியல் குறித்தும் வெளிவந்த ஆய்வுகளில் இச்சொல்லாடல் பற்றிய விளக்கங்கள் மேலோட்டமாக ஆராயப்பட்டுள்ளது. எனவே அதனை இவ்வாய்வின் முன்னோடிகளாகக் கருதப்படுகிறது. பூங்கோதையின் “சங்க இலக்கியம் காட்டும் மருதநில மக்களின் வாழ்வியலும் பண்பாடும்” (மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 2012), இரா.சௌந்தராஜின் “நெய்தல் திணைப் பாடல்களில் குறியியல்” (மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 2010),; ஆர்.மாயாண்டியின் “அகநானூறு காட்டும் பழந்தமிழ் வாழ்க்கை“ (சென்னைப் பல்கலைக்கழகம், 1972), R.Shanmugan ஆங்கிலத்தில் எழுதியுள்ள ‘The Social life of the Tamil in the Sangam Age’ (சென்னைப் பல்கலைக்கழகம், 1962) எம்.லிட் ஆய்வேடும் இவ்வாய்வின் ஆய்வேட்டு வழியாக முன்னோடியாகக் கருதப்படுகிறது. வ.சு.ப.மாணிக்கத்தின் “தமிழ்க்காதல்“, க.நெடுஞ்செழியனின் “தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம்“, ந.சுப்பிரமணியனின் “சங்ககால வாழ்வியல“, மு.சண்முகபிள்ளையின் “சங்கத்தமிழர் வாழ்வியல், பெ.மாதையனின் “அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும்“, ச.அகத்தியலிங்கத்தின் “சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே“ என்கிற தமிழ் நூற்களும் இவ்வாய்வின் முன்னோடியாகக் கருதப்படுகிறது.*

## *ஆய்வு நெறிமுறைகள்*

*இவ்வாய்வானது திணை என்னும் சொல் குறித்து காலந்தோறும் நிகழ்ந்து வரும் மாற்றங்களை ஆராய்வதால் வரலாற்றுமுறைத் திறனாய்வும் சொல் பற்றிய விளக்கங்களை ஆராய்வதால் விளக்கமுறைத் திறனாய்வும் சொல் பற்றிய விளக்கங்களைப் பகுத்து ஆராய்வதால் பகுப்புமுறைத் திறனாய்வும் மேற்கொள்ளப்பட்டு ஆராயப்பட்டுள்ளன.*

## *தொல்காப்பியர் உணர்த்தும் ‘திணை’*

*தொல்காப்பியர் திணை என்ற சொல்லிற்கு நேரடியாக விளக்கம் கூறாவிடினும் அகத்திணையியல், புறத்திணையியல் என்ற இரு இயல்களுக்குப் பெயரிட்டதுடன் அகத்திணையியல் 14 நூற்பாக்களில் 17 இடங்களிலும் புறத்திணையியயில் மூன்று நூற்பாக்களிலும் 4 இடங்களிலும் திணை என்ற சொல்லைச் சுட்டுகிறார். இவ்வாறு சுட்டுவது மக்களின் அகச்செயல்பாட்டையம் புறச்செயல்பாட்டையும் குறிப்பனவாகத்*

*திணை என்ற சொல் உள்ளது எனலாம். மக்களையும் மக்களின் அகச்செயல்பாட்டினை அல்லது உணர்வினைக் குறிக்க தொல்காப்பியர் திணை என்றே குறிப்பிடுகின்றார்.*

*“மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்” (தொல்.அகத்.நூ.57)*

*என்பார். உயர்வாகக் கருதப்படுகின்ற மக்களையும் அல்லது மக்களுக்குரிய உணர்வினையும் மற்ற உயிருள்ள, உயிரற்றப் பொருள்களையும் திணை என்ற கோட்பாட்டிற்குள் அடக்கி முதல், கரு, உரி என்று குறிப்பிடுவதை அறியமுடிகிறது.*

*“முதல் கரு உரிப் பொருள் என்ற மூன்றே” (தொல்.அகத்.நூ.3)*

*என்பார் தொல்காப்பியர்.*

*திணை என்பதற்கு பின் வந்த இலக்கண நூல்களும் உரையாசிரியரகளும் தொல்காப்பியரின் கருத்தினை அடியொற்றியே விளக்கங்களைத் தருவதை அறிய முடிகிறது. திணை என்பதற்கு இறையனார் அகப்பொருளுரை, “இனி ஒழுக்கத்தினைத் திணை என்பாரும் நிலத்திணைத் திணை என்பாரும் என இரு பகுதியர்” (இறையனார் அகப்பொருள் உரை, ப.23) உண்டு என்பதைக் குறிப்பிடுகிறது.*

*நிலத்திணை,*

*“மண் திணிந்த நிலனும்” (புறநானூறு, பா.எ.2)*

*“திணி மணல் அடைகரை” (குறுந்தொகை, பா.எ.165)*

*போன்ற சங்க இலக்கியத் தொடர்களில் திண், திணி, திணை என உருவாகும் சொல் வடிவை அறியலாம். திண்ணிதான நிலத்தையே முதலில் திணை என்ற சொல் சுட்டியிருக்கக் கூடும்.*

*“திணிநிலங் கடந்தக் காற்றிரிந்த யந்த தகன்றே” என்னும் பரிபாடல் வரிகள் இக்கூற்றினை ஒத்துள்ளது.*

*“கானவர் மருதம் பாட அகவர்*

*நீல்நிற முல்லைப் பஃறிணை நுவல” (பொருநராற்றுப்படை வரிகள், 220, 221)*

*என்ற பாடலிலுள்ள “பஃறிணை“ என்பதற்குப் பொருநராற்றுப்படை உரையாசிரியர் “பல காட்டு நிலம்“ என விளக்கம் தருகிறார். பாண்டியநாடு ஐவகை நிலமும் ஒருசேர அமையப் பெற்ற சிறப்புடைத்து என்பதை விளக்க வந்த மாங்குடி மருதனார்,*

*“ஐம்பாற் றிணையும் கவினி அமைவர” (பொருநராற்றுப்படை வரிகள், 222)*

*எனச் சுட்டுகிறார். இவ்வாறாகத் திணை என்ற சொல்லிற்கு நிலத்தைக் குறித்து சங்கப் பாடல்கள் பலவற்றில் சான்றுகளைக் காணமுடிகிறது.*

*“திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே” (தொல்.அகத்.நூ.45 )*

*என்ற நூற்பா “திணை“ என்ற சொல்லிற்கு நிலம் என்ற பொருளையே குறித்து நிற்கின்றது.*

*“நிலம் என்பதற்கு இடம், பூமி, பொழுது” (வீரமாமுனிவர், சதுரகராதி, ப.115)*

*என வீரமாமுனிவர் பொருள் தருகிறார். அனைத்துப் பொருள்களையும் தோன்றச் செய்து பின்பு நிலைப்பெறச் செய்து காத்து நிற்பதார் நிலம் எனப் பெயர் பெற்றிருக்கலாம். கருப்பொருளையும் உரிப்பொருளையும் இவற்றை உருவாக்கிய ஐம்பூதங்களையும் மண்ணில் நிலைபெறச் செய்ததாலேயும் நிலம் எனலாம். “நிலம் என்பதால் பொருள் தோன்றுவதற்கு இடமாகிய பூதமும் கொள்க” (தொல்.அகத்.இளம்பூரணர் உரை, ப.9.) என்பார் இளம்பூரணர். இவ்வாறு நிலைபெறுகின்ற நிலம் திணை அமைப்பின் அடிப்படையில் பல்வேறு வகையான நிலவியல் அமைப்பைப் பெற்றுத் திகழந்திருக்கின்றது எனலாம். இவ்வாறு முதலில் நிலம் என்ற இடத்தைக் குறித்த திணை என்ற சொல் பிறகு அவ்விடத்தில் தோன்றி மக்களின் குடியிருப்புகளையும் குறித்து வந்துள்ளது.*

*“வசைஇல் வான்திணைப் புரையோர் கடும்பொடு” என்கிற பரிபாடல் வரிகள் திணை என்ற சொல்லிற்கு வீடு என்ற பொருளினைத் தருகின்றது. நிலத்தினையும் வீட்டினையும் குறித்து வந்த திணை என்னும் சொல் அந்நிலத்தில் பிறந்த குடியினரை, குலத்தினரைக் குறிக்கலாயிற்கு*

*“வசைஇல் வான்திணைப் புரையோர் கடும்பொடு” என்கிற குறிஞ்சிப்பாடல் வரிகளுக்கு நச்சினார்க்கினியார் ‘குற்றமில்லாத உயர்ந்த குடியில் பிறந்த உயர்ந்தோர்’ என்று விளக்கம் அளிக்கின்றார். மேலும்,*

*“நின்ற மூத்த யாக்கை அன்னநின்*

*ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த” (புறநானூறு, பா.எ.24, வரி 27,28)*

*”வேற்றுமை இல்லா விழுத்திணை பிறந்து*

*வீற்றிருந்தோரை எண்ணம் காலை” (புறநானூறு, பா.எ.27, வரி 3,4)*

*“வசைஇல் விழுத்திணைப் பிறந்த*

*இசைமேந் தோன்றல் நிற் பாடிய யானே” (புறநானூறு, பா.எ.373, வரி 3)*

*“விளங்குதிணை வேந்தர் களந்தொறும் சென்று”*

*“தெறுவது அம்ம இத்திணைப் பிறந்தல்லே” (குறுந்தொகை, பா.எ.45, வரி 5)*

*என்னும் புறநானூற்று மற்றும் குறுந்தொகை வரிகள் ‘திணை’ என்னும் சொல்லை குலம், குடி, குடிமை போன்ற பொருள்களை வெளிப்படுத்துவையாக அமைகின்றன.*

## *மொழியியலில் திணை*

*தமிழர் சொல்லை உயர்திணை சொல் என்றும், அஃறிணை சொல் என்றும் பாகுபடுத்திக்கொண்டுள்ளனர். அஃறிணை என்பது அல்+திணை, அதாவது உயர்வு அல்லாத திணை என்னும் பொருளைத் தரும். ஆறு அறிவு உள்ள மக்கள் உயர்திணை. அறிவில் குறைந்த ஏனைய உயிரினங்களும், உயிர் இல்லாதனவுமாகிய பொருள்களும், இவற்றுள் அடங்கும் இடம், காலம், சினை(பொருளின் உறுப்பு), பண்பு, தொழில் பற்றிய பெயர்களும் அஃறிணை. உயர்திணையில் ஆண்பால், பெண்பால், பலர்பால் என்னும் பாகுபாடுகளும், அஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் என்னும் பாகுபாடுகளும் உண்டு. மொழியியலில் ‘திணை’ என்னும் சொல்லானது பாலின பாகுபாட்டை உணர்த்துகின்ற ஒன்றாக அமைகிறது.*

## *பொருளியலில் திணை*

*பொருள் என்பது வாழ்க்கையாகிய பொருள். இவற்றை இரு பிரிவுகளாகப் பார்த்தனர். ஆணும் பெண்ணும் உறவு கொண்டு வாழ்வதைக் கூறுவது அகவாழ்க்கை பிறவெல்லாம் புறவாழ்க்கை என்னும் பகுப்பினுள் அடக்குகின்றனர். அகவாழ்க்கை என்னும் அகத்திணையை, குறிஞ்சி, முல்லை மருதம். நெய்தல், பாலை, **கைக்கிளை, பெருந்திணை** என ஏழாகவும், புறவாழ்க்கையை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழாவும் பாகுபடுத்திக்கொண்டனர்.*

*நிலத்தைக் குறித்த சொல்லாக உருவாக்கப்பட்டப்பின் ‘திணை’ என்னும் சொல் அந்நிலத்தில் வாழ்ந்த மக்களின் ஒழுக்கங்களைக் குறிக்கும் ஒன்றாக உருவாக்கப்பட்டுள்ளது.*

*“கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்*

*முற்படக் கிளந்த எழுதிணை என்ப” (தொல்.அகத்.நூ.947 )*

*என்ற நூற்பாவிற்கு உரையாசிரியர், ‘கைக்கிளை யெனப்பட்ட ஒழுக்கம் முதலாக, பெருந்திணை யென்னும் ஒழுக்கத்தினை இறுதியாகவுடைய ஏழினையும் முற்படக் கூறப்பட்ட அகத்திணை ஏழென்று கூறுவர் ஆசிரியர்’ என நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார். இதில் திணை என்பது மக்களின் வாழ்வியலோடு நெருங்கி ஒன்றாகக் காட்டப்படுகிறது.*

*“மேம்பட வெறுத்த அவன் தொல்திணை மூதூர்” (மலைபடுகடாம், பா.வரி 401)*

*என்னும் மலைபடுகடாம் வரி ‘பழமையையுடைய உயர்ந்த ஒழுக்கத்தை உடைய பழைய ஊர்’ ஊரிலுள்ள மக்களைக் குறித்த ஆகுபெயராகி ‘திணை’ என்னும் சொல் மக்களின் வாழ்விலுக்கு வழங்கி வந்துள்ளமையினை அறியமுடிகிறது. கால வளர்ச்சியில் நிலம், வீடு, ஒழுக்கம் என்ற பொருளிலும் பின்பு இதனோடு தொடர்புடை மக்களுக்கும் வழங்கப்பட்டு வந்துள்ளமை உணர முடிகிறது.*

## *திணை கலைச்சொல்லாகம்*

*தொல்காப்பியர் திணை என்பதினை இலக்கண, இலக்கியங்களுக்குரியதாகப் பயன்படுத்தி உள்ளார். பொருளதிகாரத்தில் அகத்திணை, புறத்திணை என்று பயன்படுத்துகையில் இலக்கணத்திற்கு உரிய ஒன்றாக இலக்கண முறையினைச் சுட்டுவதாகக் குறிப்பிடுகின்றார். அதேவேளையில் உயர்திணை, அஃறிணை வரையறை செய்யும்பொழுது அது இலக்கியம் சார்ந்தாக அமைகின்றது.*

*“அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்*

*புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின” (தொல்.புறத்.நூ.1002.)*

*என்னும் நூற்பாவில் ‘திணை’ என்ற சொல் செய்யுள் வகைமையினைச் சுட்டுவதாக அமைகிறது. அதேவேளையில்,*

*“புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது*

*அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே” ‘(தொல்.அகத்.நூ.1001.)*

*“கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்*

*முற்படக் கிளந்த எழுதிணை என்ப” (தொல்.அகத்.நூ.947)*

*என்று அகத்திணையியலில் சுட்டும்பொழுது அது இலக்கியம்சார்ந்த ஒன்றாக மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்துகின்ற ஒன்றாக அமைகிறது. இவ்விரு திணைப்பகுப்பின் உட்பகுப்பாக அமையும் அவ்வெழுதிணையும் இலக்கியத்தினை புலப்படுத்துவதாக அமைகிறது.*

*ஐந்திணை அமைப்பாக அமையும் தமிழர்களின் வாழ்வியலைப் பாடமுன் வந்தவர்கள் இயற்கையை வரம்பாகக் கொண்டு வகுத்த இலக்கண விதிகளான முதல், கரு, உரி என்னும் மூன்றும் திணை என்னும் அமைப்பிற்குள் கொண்டு வந்த அதனை அகத்திணை மரபு என வரையறை செய்துள்ளனர். “தமிழரின் அகத்திணை மரபு தனித்தன்மை வாய்ந்தது உலக மொழிகள் அனைத்திலும் காதல் பாடல்கள் உண்டு. ஆனால் காதல் வாழ்வை திணை மரபாகக் கொண்டு இலக்கணம் வகுத்ததை நாம் நினைவில் கொள்ள வேண்டும்” (க.நெடுஞ்செழியன், தமிழர் தருக்கவியல், ப.93) என்னும் க.நெடுஞ்செழியனின் கூற்றும் இதனை உறுதிசெய்கிறது. இதனை ஒட்டியே திணையை மக்களின் வாழ்வியலாக வகுத்துப் பாடுகின்ற முறைமையும் பின்பற்றபட்டுள்ளது. இக்கருத்தைப் போலவே “அகத்துறைச் செய்யுள்களைக் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணைகளுள் ஒவ்வொன்றிற்கும் உரியவாக அமைக்க வேண்டும் இதுவும் ஓர் இலக்கிய மரபு” (எஸ்.வையாபுரிப்பிள்ளை, தமிழர் பண்பாடு, ப.96) எஸ்.வையாபுரிப்பிள்ளையின் கருத்தும் ‘திணை’ என்னும் சொல் காலப்போக்கில் இலக்கிய மரபாக மாறிவந்துள்ளதை அறியமுடிகிறது.*

## *திணை என்கிற சொல்*

*தொல்காப்பியரின் வழக்கம் தொட்டு ‘திணை’ என்னும் சொல் நிலம், குடி, குலம் போன்ற பொருளில் வழங்கப்பட்டு பின்பு அது இலக்கண, இலக்கியச் சொல்லாக பொருள் மாறிய நிலையினையும் அறியமுடிகிறது. அவ்வாறு இலக்கண, இலக்கியத்துக்குரிய சொல்லாக மாறிய நிலையில் அது மரபாக மாற்றம் அடைந்துள்ளது.*

### *அகராதி வழியாக திணை என்னும் சொல்லாடல்*

*"திணை என்றால் நிலம், குலம், இடம், வீடு ஒழுக்கம், உயர்திணை, அஃறிணை என பல பொருள்படும்"[24] (ஆ.சண்முக பிள்ளை, தமிழ் அகராதி,ப.571) என்று தமிழகராதி உரைக்கின்றது. க்ரியாவின் தற்காலத் தமிழகராதி "திணை-மனிதர்களையும் விலங்குகளையும் பொருள்களையும் பிரிக்கும் பகுப்பு, உயர்திணை, அஃறிணை (இலக்கியத்தில்) நடந்து கொள்ள வேண்டிய முறை, ஒழுக்கம் அகத்திணை புறத்திணை" (க்ரியாவின் தற்காலத் தமிழ அகராதி, ப.542) எனக் கூறுகிறது. திணை என்ற சொல்லிற்கு "இடம், ஒழுக்கம், குடி, குலம், பூமி, பொருள், உயர்திணை, அஃறிணையாகிய பிரிவு, வீடு, திண்ணை, உயர்நிலம் என்றும், திணைகள் என்ற சொல்லிற்கு "சனங்கள். வகுப்புகள், உத்தியோகஸ்தர்கள்" (மதுரைத் தமிழகராதி, முதல் பாகம், ப.156) என்றும் மதுரைத் தமிழகராதி பொருள் சுட்டுகிறது.*

### *நிகண்டுகள் வழியாக திணை என்னும் சொல்லாடல்*

*திணை என்ற சொல்லிற்குப் பொருள் கூற வந்த பிங்கல நிகண்டு, "குலம், நிலம், ஒழுக்கம் திணையே" (பிங்கலநிகண்டு, ப.3541) எனவும் சூடாமணி நிகண்டு, "நிலம், குலம், ஒழுக்கம் என்ற பொருளையும், பூமி, சாதி,ஆசாரம்" (சூடாமணி நிகண்டு. பதினொன்றாம் தொகுதி, ப.227) என்று முறையே அதற்கான விளக்கத்தையும் கொடுக்கிறது. நிலம், குடி, ஒழுக்கம், வன்மை ஆகியவற்றிற்கு விளக்கம் தருகின்றன. நாமதீப நிகண்டு, 'மா, வேலி, காணி, திணை, பூ, நிலம்' என்ற நிலத்திற்காக விளக்கத்தையும் குடிக்கான விளக்கமாக 'குடி, திணை' என்றும் ஒழுக்கத்திற்காக விளக்கமாக 'கை, இயல்பு, ஆசாரம், திணை, ஒழுக்கம் என்றும் வன்மைக்காக விளக்கமாக "திணை, உரம்'" (நாமதீப நிகண்டு, பக்.145, 183, 236) என்றும் சுட்டுகின்றது.*

*சூடாமணி நிகண்டு 'திணை' என்பதினை நிலம், குடி, ஒழுக்கம் என மக்களின் வாழ்விடம் சார்ந்தும் அவ்விடத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் சார்ந்தும் வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது. நாமதீப நிகண்டு நிலத்திற்கான விளக்கத்தினையும் குடிக்கான விளக்கத்தினையம் வெளிப்படுத்துகின்றது. ஏனைய நிகண்டுகளும் இதன் பொருள் அடிப்படையிலேயே விளக்கத்தினைத் தருகின்றன.*

### *கலைக்களஞ்சியம் உணர்த்துகின்ற திணை என்னும் சொல்லாடல்*

*அகத்திணை, புறத்திணை என்கிற நிலையில் இலக்கணம் சார்ந்தும் நிலம், இடம், வீடு, குடி, குலம், ஒழுக்கம், உயர்திணை, அஃறிணை என இலக்கியம் சார்ந்தும் திணை என்னும் சொல் காலந்தோறும் வழக்கப்பட்டு வந்துள்ளதை அறியமுடிகிறது. இதேநிலையில், "தொல்காப்பியத்தில் இலக்கணக் கலைச்சொல்லாகவும், இலக்கியக் கலைப்பொருளாகவும் பெரிதும் பயன்படுகிறது. அறிவு ஒழுக்கங்களால் சிறந்த மக்களைச் சுட்டும் சொற்கள் உயர்திணை என்றும், மக்களல்லாத அனைத்தையும் சுட்டும் சொற்கள் அஃறிணை என்றும் பாகுபடுத்தும்போது திணை என்பது இலக்கணக் கலைச் சொல்லாகிறது. ஆயினும் பொருளதிகாரத்தில் இது பெரிதும் இலக்கியக் கலைச்சொல்லாகவே ஆளப்படுகிறது" (வாழ்வியற்களஞ்சியம், தொகுதி.10, ப.252) என்று வாழ்வியற்களஞ்சியம் குறிப்பிடுகிறது. எனவே இலக்கண நிலையில் இருந்து திணை என்னும் சொல் நிலவியல் சார்ந்தும் அதன் கருப்பொருளாக உள்ள மக்கள் சார்ந்தும் இலக்கிய நிலையில் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.*

### *முடிவுரை*

*திணை என்பது இலக்கணம் சார்ந்தும் இலக்கியம் சார்ந்தும் பல்வேறு விதமான பொருளில் கையாளப்பட்டுள்ளது. திணை என்பதும் நிலம் சார்ந்தும் அதன் ஒழுக்கம் சார்ந்தும் பொதுவாக தமிழிலக்கியத்தில் அறியப்பட்ட நிலையிலிருந்து இவ்வாய்வு அதன் பல்வேறு பொருண்மையினை ஆராய்ந்துள்ளது.*

### *REFERENCES*

Balasubramanian KV (Ed.), (2007), Sanga ilakkiyam mulamum uraiyum, New Century Book House, Chennai.

வாகை பதிப்பகம்

Chidambaram Pillai, W.U. (Ed.), (1928) Tholkappiyam, Illampurnar, Porul Adhigaram (Agathinaiiyyal, Purathinaiiyyal), Velayutham Printing Press, Thoothukudi.

Chidambaram Pillai, W.U. (Ed.), (1935) Tholkappiyam, Illampurnar, Porul Adhigaram (Meipattiiyyal, Uvamaiiyyal, Seiiyyal), Vavilla Ramaswamisastrulu Anda Sons, Chennai.

Nagarajan,V, (Ur.), A.M. Parimanam, KV Balasubramanian (Ed.), (2007), Agananuru mulamum uraiyum, New Century Book House, Chennai.

Nagarajan,V, (Ur.), A.M. Parimanam, KV Balasubramanian (Ed.), (2007),Kurunthogai mulamum uraiyum, New Century Book House, Chennai.

Nagarajan,V, (Ur.), A.M. Parimanam, KV Balasubramanian (Ed.), (2007), Purananuru mulamum uraiyum, New Century Book House, Chennai.

Padmasani, T. Selvam, A. Mani (Par.) Tolkappiyam in Versatility, Volume-2, C. (2013), Tamilnadu Laboratory, Pondicherry.

Prakash, V., (2016), Thinnai of Sense and Material, Gift Book Center, Chennai.

Sivathambi. Ka., (2007), Tholkappiyam and Poetry, Kumaran Book House, Colombo - Chennai.

Illampurnar, (1970) Tholkappiyam, Porul Adhigaram (Agathinaiiyyal, Purathinaiiyyal), Toxicology, Tirunelveli South Indian Vegan Centennial Society, Chennai.

Ungal Noolagam, (2016), malar 8, Magazine 3, New Century Book House, Chennai.

Venkataramayya. K.M., Subramanian, S.V., Nagarajan B.V., (Ed.) (1996) Tholkappiya, Course Variations: Introspection, International Dravidian Linguistic Society, Thiruvananthapuram

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License